**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்**
**முன்னிலை. திரு.தினேஷ்குமார், B.A.L.L.B. (HONS).L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.2 திண்டுக்கல்**
**2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள் திங்கட்கிழமை**
**குற்றவியல் பல்வகை மனு எண். 2295/2025**
**CNR No. TNDG03-005045-2025**

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா,
வங்கிக்காக அதன் கிளை மேலாளர்,
திரு. G. சதீஷ் (32/2025),
த/பெ. கணேசன்,
ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா,
வேடசந்தூர் கிளை,
திண்டுக்கல்.

.... மனுதாரர்/ புகார்தாரர்

/Vs/

1. P. ரகுராம் (29/2025)
த/பெ.பத்மநாபன்,
1/197, கனகலெட்சுமி நகர்,
மல்லியம்பத்து அஞ்சல்,
வயலூர் ரோடு,
திருச்சி.

2. R. பூஜா காவேரி (25/2025),
க/பெ. ரகுராம்,
1/197, கனகலெட்சுமி நகர்,
மல்லியம்பத்து அஞ்சல்,
வயலூர் ரோடு,
திருச்சி.

3. P. நர்மதா, (57/2025),
க/பெ. பத்மநாபன்,
1/197, கனகலெட்சுமி நகர்,
மல்லியம்பத்து அஞ்சல்,
திருச்சி.

4. பாலசுப்பிரமணியன் (44/2025),
அய்யனார் நகர்,
வேடசந்துார்,
திண்டுக்கல்.

5. சரண்யா, (40/2025),
க/பெ. பாலசுப்பிரமணியன்,
அய்யனார் நகர்,
வேடசந்துார்,
திண்டுக்கல்.

6. ஜோதிமணி (66/2025),
த/பெ. ராஜ்,
நடுத்தெரு,
தப்புக்குண்டு,
தேனி.

7. ஜகீர் உசேன், (42/2025),
த/பெ. பரூக்,
5, பாரிஜாதாமலர் தெரு,
சஞ்சீவி நகர், தேவதானம்,
பிள்ளையார் கோவில் அருகில்,
திருச்சி.

8. ரபீயாபானு, (35/2025),
த/பெ.ஜாஹீர் உசேன்
5, பாரிஜாதாமலர் தெரு,
சஞ்சீவி நகர், தேவதானம்,
பிள்ளையார் கோவில் அருகில்,
திருச்சி.

9. ரஞ்சித் குமார் (27/2025),
த/பெ. தங்கவேல்,
3/304, அய்யனார் நகர்,
வேடசந்துார்,
திண்டுக்கல்.

10. மணிகண்டன் முத்துச்சாமி (20/2025),
த/பெ. முத்துச்சாமி,
134, குளத்துப்பட்டி,
திண்டுக்கல்.

11. முருகேசன் காளியப்பப்பிள்ளை (39/2025),
த/பெ. காளியப்பப்பிள்ளை,
வாத்தியார் புதுார்,
கோவக்கப்பட்டடி,
திண்டுக்கல். ... எதிரிகள்

12. உயர்திரு. மாவட்ட கண்காணிப்பாளர் அவர்கள்,
திண்டுக்கல்.

13. உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள்,
மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையம்,
திண்டுக்கல்.

...எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 11.06.2025 அன்று BNSS பிரிவு 175(3)-ன் கீழ், மனுதாரர்/புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் திரு.M.குருநாதன், M.A., B.L., என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. காவல்துறை தரப்பில் பதில் பெறப்பட்டது. இருதரப்பு வாதங்களை பரிசீலித்தும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவாகப் பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதங்கள்

கேட்கப்பட்டது. காவல் துறையினரால் தாக்கல் செய்யப்பட்ட பதில் அறிக்கை பரிசீலிக்கப்பட்டது.

1. மனுதாரர் தாக்கல் செய்த மனுவில், மனுதாரர் நிறுவனமான ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மேற்படி முகவரியில் இயங்கி வருவதாகவும், மேற்படி வங்கியில் 1ம் எதிரி 21.06.2021 முதல் 30.05.2024 வரை பணியாற்றிவந்தார் என்றும், அந்த காலகட்டத்தில் அவர் வங்கி பரிவர்த்தனைகளில் பல பண மோசடிகள் செய்திருப்பது ஆய்வுக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும், கடந்த 22.11.2024ம் தேதியன்று நடைபெற்ற Internal Audit (RFIA) ஆய்வில் ஆவணங்களை பரிசீலித்து பார்த்து கீழ்க்கண்ட மோசடிகள் ரகுராம் மற்றும் அவரது கூட்டாளிகளான 10 எதிரிகளால் செய்யப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

2. மேலும், 1 முதல் 10 எதிரிகள் கூட்டுச் சேர்ந்து சதி திட்டம் தீட்டி மனுதாரர் வங்கியை மோசடி செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் சட்டத்திற்கு புறம்பாக பல பரிவர்த்தனைகள் 1வது எதிரியான ரகுராம் என்பவரால் செய்யப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், 1வது எதிரி பல வாடிக்கையாளர்களின் கடன் கணக்குகளிலிருந்து முறைகேடாக தனது மனைவி மற்றும் உறவினர்களின் வங்கி கணக்கிற்கு முறைகேடாக மாற்றப்பட்டுள்ளதாகவும், அந்த தொகைகளுக்கான அனைத்து Voucher / ரசீதுகள் ரகுராம் அவர்களால் போலியாக தயாரிக்கப்பட்டு, அவரால் மட்டுமே Authorize செய்யப்பட்டதாகவும், மொத்த தொகை ரூ.20,73,587/- தொகையை 1வது எதிரி ரகுராம் தனது நண்பர்கள், உறவினர்கள், தரகர்களுடன் கூட்டுச்சேர்ந்து சட்டத்துக்கு விரோதமாக மனுதாரர் வங்கியை மோசடி செய்யவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் எடுத்துக் கொண்டதாக குறிப்பிட்டுள்ளது.

3. எனவே, 1 முதல் 11 எதிரிகள்மீது சட்டப்பிரிவுகள் 65, 318,(4), 316 (2), 336(3), 340(2) BNSன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாகவும், எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை செய்ய உத்தரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. In the judgment of Lalithakumari Vs. Government of Uttar Pradhesh and others 2013(4) Crimes page 243(SC), the Hon'ble Supreme Court has held that if the criminal petition discloses a cognizable offence, an Investigation shall commence with registration of F.I.R. however, exception to this, in respect of following criteria.

i) Family/matrimonial disputes

ii) Commercial offences

iii) Medical negligence cases

iv) Corruption Cases

v) Cases where there is abnormal delay in initiating criminal prosecution, preliminary enquiry to be envisaged prior to registration of F.I.R.

5. மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்ததில், மனுதாரர் நிறுவனமான ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, மேற்படி முகவரியின் இயங்கி வருவதாகவும், மேற்படி வங்கியில் 1ம் எதிரி 21.06.2021 முதல் 30.05.2024 வரை பணியாற்றிவந்தார் என்றும், அந்த கால கட்டத்தில் அவர் வங்கி பரிவர்த்தனைகளில் பல பண மோசடிகள் செய்திருப்பது ஆய்வுக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும், புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு 1வது எதிரி, மற்ற எதிரிகளுக்கு லோன் கொடுப்பது போல் கொடுத்து அனைத்து பணப்பரிவர்த்தனைகளையும் சட்டவிரோதமாக வங்கி விதிமுறைகளை மீறி மனுதாரர் வங்கியை மோசடி செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மொத்த

தொகைகளுக்கான Voucher/ரசீதுகள் 1வது எதிரியால் தயாரிக்கப்பட்டு அவரால் மட்டுமே Authorize செய்யப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், மேற்படி லோன் தொகைகள் அனைத்தும் வங்கி விதிமுறைகளுக்கு உட்பட்டு கொடுக்காமல் தன்னிச்சையாக பரிவர்த்தனை செய்துள்ளார் என்று புகார் அளித்துள்ளார். மேலும், புகார்தாரர் சமர்பித்த பணப்பரிவர்த்தனை ஆவணங்கள் மற்றும் போலிசார் அறிக்கையினை பரிசீலனை செய்யும்போது புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு பணப்பரிவர்த்தனை நடந்துள்ளது என்று தெரிய வருகிறது. ஆனால், மேற்படி எதிரிகள் அனைவரும் கூட்டுச்சதி செய்து, புகார்தாரரின் வங்கியின் விதிமுறைகளை மீறி, 1வது எதிரி மற்ற எதிரிகளுக்கு லோன் மூலம் பணப்பரிவர்த்தனை செய்து மோசடி செய்துள்ளாரா என்பதை உரிய விசாரணையின் மூலமே தெரியவரும் என்பதாலும், எதிரிகள் மீது குற்ற முகாந்திரம் உள்ளதா என்பதையும், சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரி புலன் விசாரணை மேற்கொண்டு, புகாரின் மீது புலன்கொள் குற்றம் கண்டறியப்பட்டால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு புலன்கொள் குற்றத்திற்கான முகாந்திரம் இல்லையெனில், புகார்தாரருக்கு அறிவிப்பு அனுப்பி இந்நீதிமன்றத்தில் அறிக்கையை சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

6. இந்த உத்தரவின்படி, சம்பந்தப்பட்ட காவல் அதிகாரி முதற்கட்ட விசாரணையையோ, அல்லது புலன் விசாரணை மேற்கொள்ளத் தவறினால், "Sugeshan Transport Pvt. Ltd. Vs. The Inspector of Police, reported in 2016 (2) L.W.499" என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் வழிகாட்டுதலின் படி மனுதாரர் பின்பற்றி பரிகாரத்தை தேடிக்கொள்ளலாம்.

முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள் திங்கட்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.10 14:15:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
திண்டுக்கல்.